முருகப்பெருமான் துணை

**மகான் சிறப்புலி நாயனார் அருளிய யோக பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**09.05.2021**, ஞாயிற்றுக்கிழமை

1. காக்கும் சக்தி கொண்ட அரங்கா
கருணையாக வந்த தேசிகா
ஆக்கமான உன் கொள்கைவழி
அகிலம் மாறுமெனக் கூறி
2. கூறியே யோகபிரசன்ன ஆசி
குறைவிலா பிலவ தகர் திங்கள்
இருபானாற் திகதி கதிர் வாரம்
(பிலவ வருடம் சித்திரை மாதம் 26ம் நாள், 09.05.2021 ஞாயிற்றுக்கிழமை)
இயம்புவேன் சிறப்புலி நாயனார் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உன்வழி சரணடைந்தவர்கள்
ஞானவான்களாகச் சிறந்துமே
ஞானயுக மாற்றம் செய்வர்
4. செய்யவே உன் மாதருமம்
சிறப்பாய் உலகம் எங்கிலும்
மெய் ஞானமாகப் பரவிட
முன்னேற்றமாக மாற்றம் கண்டு
5. கண்டுமே உலக மக்களிடை
கருணை எனும் தயவு கூடும்
தொண்டுக்கு வரும் சக்தியாக
தெய்வ அனுகூலம் கூடி சிறக்கும்
6. சிறக்கவே இந்த கலியின்
சிக்கல்கள் யாவும் தானே
புறந்தள்ளி அகல நேரும்
புண்ணிய பலம் கூட கூட
7. கூடவே எல்லாம் சமம்
குவலயத்தில் எல்லோரும் சமம்
சுடரே ஞான சூட்சுமம்
சுத்த நெறியே சரியான வழி
8. வழிகாட்டும் அரங்கனே கலியில்
வாழும் ஞானி கடவுளெனும்
தெளிவு திடம் கூடியே
தெய்வநிலை அடையக் கூடும்
9. கூடவே மக்களிடை இந்த
குறைவிலா சரணடைவு தானும்
ஈடேற உலக மாற்றமாக
இனிதே கலியும் கண்டடையும்

10. அடையவே மேலவர்களும்
அரங்கன் வழி ஆசி தந்து
தடையிலா வரங்கள் அருள
தரணியோர் தொடர்ந்து வர

11. வருகவே அரங்கர் மயமாக
வையகம் ஞான சித்தி கூடி
முருகப்பெருமான் தலைமை காணும்
முழுமைபட மாற்றம் பெறும்
யோகபிரசன்ன ஆசி முற்றே

–சுபம்–